(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | STC.No.360/2022 |

வாதி தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW –1

பெயர் : கணபதி

த/பெ : ஈனகோனார்

**(எதிரி ஆஜர்)**

2024 ம் ஆண்டு மே திங்கள் 03 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு எழுத படிக்க தெரியாது. புகாரில் என்ன எழுதியிருக்கிறது என்றால் எனக்கு தெரியும். எனக்கு படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்வேன். காசோலையில் எவ்வளவு நிரப்பி இருக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். காசோலையில் எவ்வளவு ரூபாய் எழுதியிருக்கிறது என்று யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டீர்கள் என்றால் நான் பார்த்து தெரிந்து கொண்டேன். எதிரி உங்கள் உறவினர் என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி சரஸ்வதி பைனான்ஸ் என்ற பெயரில் அடகு கடை வைத்திருக்கிறார் என்றால் சரிதான்.

2)இராதாபுரம் கணபதி நகரில் உங்கள் மருமகன் முருகேசன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் மகள் செல்வியுடன் பேச்சி வார்த்தையுடன் இருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் மகள் செல்வி வீட்டில் நடக்கும் விஷயம்

அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. உங்கள் மருமகன் முருகேசனுக்கும், எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால் அவர் அதைப்பற்றி என்னிடம் பேசியது கிடையாது. இராதாபுரம் சீனிவாச சங்கர் என்பவரை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி வசதி படைத்தவர் என்று புகார் மனுவில் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரிக்கு வழக்கு கடனுக்கு முன்பு கடன் எதுவும் கொடுத்துள்ளீர்கள் என்றால் அதற்கு முன்பும் கொடுக்கல் வாங்கல் உண்டு.

3) உங்கள் மருமகன் முருகேசனும் எதிரிக்கும் கடன் கொடுத்து வாங்குவார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் எவ்வளவு ஆட்டை விற்று வங்கியில் பணம் போட்டு வைத்துள்ளீர்கள் என்று எதிரிக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் வங்கியின் வரவு செலவு பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் புகார் மனுவில் எதிரிக்கு 1 1/2 பைசா வட்டியில் தான் கடன் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். வட்டிக்கு பணம் கொடுக்க உங்களிடம் உரிமம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி வட்டி சட்டத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல. எதிரி எப்பொழுது பணம் தருவார் என்று குறிப்பிட்டார் என்பதை புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) கடன் கொடுத்த அன்று எதிரி காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி என் முன்புதான் காசோலையில் கையொப்பம் செய்து கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.1,2 ல் காசோலையில் கண்ட எழுதிற்கும் கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் எனக்கு வித்தியாசமாக தெரியவில்லை. அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார். காட்டப்படும் மா.சா.ஆ.1,2 ல் தமிழில் தான் கையொப்பம் செய்து உள்ளது என்றால் சரிதான். எதிரியின் காசோலைகள் வேறு எதுவும் உங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. காசோலையில் திருப்பப்பட்ட விவரத்தை எதிரியிடம் கூறினீர்களா என்றால் எதிரியிடம் கேட்டு பார்த்தேன். அவர் தாராதால் வழக்கறிஞர் மூலம் மனு கொடுத்தேன்.

5) வங்கியில் இருந்து காசோலை திருப்பப்பட்ட விவரத்தை எதிரியிடம் குறிப்பிட்டதை புகாரில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை. எதிரிக்கும் உங்கள் மருமகனுக்கும் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.69/2021

என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி உங்கள் மருமகனுக்கு ரூ6 லட்சம் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட குற்றப் பிரிவில் புகார் நிலுவையில் உள்ள விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி சரஸ்வதி பைபான்ஸ் என்ற நிறுவனத்தை 26-02-2021 ல் மூடுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் உங்கள் மகன் பராமரிப்பில் தான் இருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் ரூ5 லட்சம் பணம் கொடுக்கும் அளவுக்கு உங்களுக்கு வசதி வாய்ப்பு கிடையாது என்றால் சரியல்ல. எதிரி உங்கள் மருமகனுக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கு கொடுத்த காசோலையை பயன்படுத்தி நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படி உங்களுக்கு பணம் எதுவும் கொடுக்க வேண்டியது கிடையாது என்பதால் வழக்கை தள்ளுப்படி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.